# தமிழ்
# மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 2 | செப்டம்பர் 1942 | இதழ் 9



## மனத்தளர்ச்சி வேண்டாம்

எதிரியின் விமானங்களினால் உண்டாகும் நஷ்டங்களைத் தடுப்பதற்காக கவர்ன்மெண்டார் 'ஏர்ரெய்டு பிரிகாஷன்' (A. R. P.) எனும் ஒரு இலாக்காவை ஏற்படுத்தினர். அதில் ஒரு பாகம் காயப்பட்டவர்களுக்கு முதலுதவி அல்லது உபசாந்தி (First Aid)செய்வதற்காக உளது. அதில் வைத்தியர்கள் அநேகர் வேண்டியிருப்பதனால் பல ஆங்கிலமுறை வைத்தியர்களும் L. I. M. களும் கவுரவ அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டனர். அங்ஙனம் சேர்ந்தவர்களில் சிலர் உத்தியோகத்திலிருந்து ஊழியம் பெற்றவர்களாயும், சிலர் சொந்தமாக வைத்தியசாலை வைத்து மக்களுக்குச் சிகிச்சைசெய்து வந்தவர்களாயு மிருந்தனர். சென்ற எப்ரல் மாதம் அபாய சங்கு ஒலித்தபோது பொதுமக்கள் ஓடிவிட்டனர். ஆனால் A. R. P. யில் சேர்ந்த வைத்தியர்கள், அவர்கள் ஏற்றுக்கொண்ட தொழிலின் பொருட்டு ஓடாது நின்றனர். பொதுமக்கள் போய்விட்டதால் அங்ஙனம் நின்ற உத்தியோகமில்லாத வைத்தியர்களுக்கு வருமானம் குன்றியது. ஆகையால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அச்சமயத்திலிருந்து மாதம் ரூ. 60 வீதம் கவுரவச் சம்பளம் அளிக்கத் தீர்மானித்து இரண்டுமாதங்களுக்கு முன்பு சம்பளமும் கொடுக்கப்பட்டது. L. I. M. களுக்கு ஒன்றும் வழங்கவில்லை. இக்குறையைச் சர்க்காருக்குத் தெரிவிக்கும்பொருட்டு டாக்டர் B. M. தங்கராஜ் L. I. M L. C. P. & S. (Cal) அவர்களின் தலைமையில் சில எல். ஐ. எம்.கள் சென்ற ஜூலை மாதம் பிரதம காரியதரிசி (Chief Secretary) யைக்

கண்டு பேசி, அவர்களுக்குரிய சம்பளங்களை மாதம் 60 ரூபாய்கள் வீதம் பெற்றனர். அங்ஙனம் பெற்ற டாக்டர்கள் B. M. தங்கராஜ் K. V. லக்ஷ்மி, K. குலாபிபாய் அவர்களை நாம் பாராட்டுவதுடன், சர்க்காருக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனமே நமக்குள்ள பல குறைகளும் சர்க்காரால் நீக்கப்படு மென்று உறுதிகொண்டு மனத்தளர்ச்சியை விட்டு நமக்கு உரிய காரி யங்களைச் செவ்வனே செய்வோமாக.

---

# சிரோவஸ்தி

## "C. D."

சினேக (தைல) சிகிச்சை செய்யுங்கால் தைலத்தைப் பலவிதங் களாகக் கையாளுகிறோம். அம்முறைகளுள் சிரோவஸ்தி முக்கிய மானதாகும். இதனை வெகு சாக்கிரதையாய் வைத்தியரே செய்ய வேண்டும். இம்முறை இப்பொழுது மலையாள தேசத்தில் அதிகப் பழக்கத்திலுள்ளது. இதன் செய்முறைகளையும் அப்போது அனு சரிக்க வேண்டிய விதிகளையும் இங்கு விளக்குவாம்.

சிரோவஸ்தி செய்வதற்குவேண்டிய பொருள்கள :— 1. நோயா ளிக்குத்தக்க தைலம் ஒன்றரை புட்டிமுதல் இரண்டு புட்டிகளாம் அதாவது சுமார் 30 அவுன்ஸ் முதல் 48 அவுன்ஸுகளாம். சாதா ரணமாக 25 முதல் 50 முறை மடக்கிய பலாமடக்குத் (க்ஷீரபலா) தைலம் உபயோகப்படுகிறது. வேறு தைலங்களையும், நெய்களையும் (கிருதங்களையும்) உபயோகிக்கலாம். ஒரு நாள் உபயோகித்த தைலத் தையோ, கிருதத்தையோ மறுபடி வேறு நாட்களில் உபயோகிக்கக் கூடாது.

2. மேற்கட்டியில்லாது சுற்றி சுவறுமட்டுமுள்ள ஒரு தோற் குல்லாய். இது மிருதுவாயும் வன்மையாயுமுள்ள பசுத்தோலால் செய்ததாயும் பன்னிரண்டு விரல்கள் அகலமாயும், தலையின் சுற்றளவு நீளமாயுமிருக்கவேண்டும். அதாவது தலையில் அணிந்தால் காது மட்டத்தில் பொருந்தக்கூடியதாயும், உச்சிக்குமேல் நான்கு அல்லது ஆறு விரல்கள் உயரமுள்ளதாயு மிருக்கவேண்டும்.

3. (1) மூன்று அங்குலம் அகலமும் தலையைச்சுற்றி கட்டக்கூடிய நீளமுள்ள சீலை.

(2) நெற்றிமட்டத்தில் தலையைச்சுற்றிக் கட்டுவதற்கு வர்த்தியைப்போல் முறுக்கிய துணி.

(3) பன்னிரண்டு அங்குல அகல நீளமுள்ள சீலைத்துண்டுகள் இரண்டு.

4. தைலத்தைக் காய்ச்ச மூன்று சட்டிகள்.

5. உளுந்துமா.

6. அடுப்பு.

7. கலக்க ஓர் அகப்பை.

8. நோயாளி உட்கார ஒரு பீடம்.

9. வைத்தியருக்கு உதவி செய்ய பழக்கமுள்ள ஆட்கள் இருவர்.

செய்முறை :—

இது மலையாளதேசத்தில் மாலை இரண்டு மணிக்குமேல் ஆறு மணிக்குள் செய்யப்படுகிறது. நோயாளியின் பசி, சீரணம், மலம் முதலியன தம் அளவிலிருக்கின்றனவா என்று கவனித்துத்தான் இச்சிகிச்சையைத் தொடங்கவேண்டும். மூடியிருக்கும் ஓர் அறையின் நடுவில் நோயாளியை மேற்கு பார்த்தபடி பீடத்தில் உட்காரவைக்க வேண்டும். மூன்று அங்குல அகலமுள்ள துணியைக் காதுக்குமேல் தலையைச்சுற்றி இறுக்கிக்கட்டி தோல் குல்லாயை அணிவிக்கவேண்டும். இது புருவம், காது மட்டத்தில் தலைக்குப் பொருத்தமாகயிருக்க வேண்டும். நழுவாமலிருக்கும்பொருட்டு வர்த்திபோல் முறுக்கிய துணியை அதன்மேல் சுற்றிக் கட்டவேண்டும். தலைக்கும் குல்லாய் வரம்புக்கும் நடுவிலுள்ள சந்துவழி தைலம் வராதவாறு உளுத்தம் மாவை நீர்விட்டுப் பிசைந்து பூசவேண்டும்.

தைலத்தை அடுப்பில் வைத்து போதுமான அளவு சூடான பிறகு எடுத்து நிதானமாகவும் மெல்லவும் தலையில் ஊற்றவேண்டும். அப்போது நோயாளி தலையைச் சாய்க்காது, நிமிர்ந்து உட்கார்ந்திருக்கவேண்டும். தலையின் உச்சிக்குமேல் இரண்டு விரக்கடை உயரம் வந்தவுடன் தைலத்தை ஊற்றாது நிறுத்திவிடவேண்டும். தைலம் எவ்வளவு சூடாக இருக்கலாம் என்பதை வைத்தியர் காலத்தையும் நோயாளியையும் அனுசரித்துக் கணிக்கவேண்டும். தலையிலிட்ட தைலத்தின் சூடு குறையின் சதுரசீலைகளை அத்தைலத்தில் நனைத்து நனைத்து எடுத்து ஒரு சட்டியில் பிழிந்துகொண்டு, வேறு சூடான தைலத்தைத்

தக்களவு (முற்கூறிய அளவு) தலையில் விடவேண்டும். சட்டியிலிட்ட குளிர்ந்த தைலத்தை மறுபடி சுடவைத்து, தலையிலிருக்கும் தைலம் குளிர்ந்துவிட்டால் அதனை நீக்கி, இதனை விடலாம். இப்படியாக இறுதிவரையில் தலையிலிருக்கும் தைலத்தின்சூடு ஒரே திட்டமாக இருக்கும்படி செய்துகொள்ளவேண்டும். அன்று செய்யும்படியான அச்சிகிச்சைக்குமட்டும் ஒரே தைலத்தைப் பலதடவை வெதுப்பி உபயோகிக்கலாமே ஒழிய வேறு சிகிச்சைக்காயினும் மற்ற தினங்களி லாயினும் அதனை உபயோகிக்கக் கூடாது.

வாதநோய்களில் தினம் 53 நிமிடங்கள் வீதம் ஏழு தினங்களும் பித்தநோய்களில் தினம் 42½ நிமிடங்கள் வீதம் ஐந்து தினங்களும், கபநோய்களில் 32 நிமிடங்கள் வீதம் மூன்று தினங்களும் செய்யலாம். ஒவ்வொரு தினமும் இவ்வளவு நாழிகை செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பினும் அக்காலத்திற்குள் நோயாளிக்கு உமிழ்நீர் அதிகம் ஊறினும் அல்லது தும்மல் உண்டாயினும் கபமிளகிற்றென்று உணர்ந்து, தலையிலுள்ள தைலத்தை உடனே துண்டு சீலைகளால் நீக்கவேண்டும். தைலத்தை முற்றும் நீக்கிய பிறகு உளுந்துமாவையும், துணிவர்த்தி, சீலை முதலியவைகளையும் மெல்ல நீக்கவேண்டும்.

பிறகு சில நிமிடங்கள் பிடரியையும் காதுக்கருகிலுள்ள பாகங்களையும் உருவி பிடித்து விடவேண்டும். தாரை சிகிச்சையின் இறுதியில் தலைக்கும் உடலுக்கும் எப்படி வெவ்வேறு தைலங்கள் தேய்க்கப்பட்டனவோ, அவ்வாறே இப்போதும் வெவ்வேறு தைலங்களைத் தலைக்கும் உடலுக்கும் தேய்க்கவேண்டும். மருந்துச் சரக்குகளிட்டுக் கொதிக்கவைத்தாறிய நீரைத் தலைக்கும், வெந்நீரை உடலுக்கும் விட்டு குளிப்பாட்டவேண்டும். தைல ஸ்நானத்திற்குத் தகாதவனுயிருந்தால் தோல்குல்லாய் முதலியவைகளை நீக்கி, தலையைத் துடைத்து ஒரு சீலையால் தலையைச்சுற்றி கட்டிப் படுக்கவைக்கவேண்டும்.

இங்ஙனம் ஒரு முறை செய்வதினால் நோய் நீங்காவிடின் மறுபடியும் சிரோவஸ்தியை இரண்டு வாரங்கள் அல்லது இரண்டு மாதங்கள் கழித்து செய்யலாமேயொழிய எக்காரணத்தினாலும் மேற்குறிப்பிட்ட தினங்களுக்கு மேல் செய்யக்கூடாது. அங்ஙனம் செய்யின் குற்றமுண்டாகும்.

பத்தியம் :— தாரையில் கூறிய பத்தியங்களே இதற்கும் உதவும்.

தீரும் நோய்கள் :— பாலகரையும் வழுக்கையும், வாத சிரோ நோய்கள் முக்கியமாக ஒற்றைத்தலைவலி, சூரியாவர்த்தம், செவிடு, செவிநோய்கள், கர்ணநாதம், வாததிமிரம், நித்திரை பங்கம், அல்லது இன்மை, மயக்கம், வாய், மூக்கு இவைகளின் வறட்சி, சில பட்சவாதங்கள் இவைகளாம். தலையிலுள்ள புலன்களுக்கு வன்மையை உண்டாக்கும். தலையும் தாளும் பலம் பெறுவதோடு, தொனியும் இயற்கை நிலை யடையும்.

குறிப்பு :— சிநேக சிகிச்சை கூடாதவர்களுக்கு சிரோவஸ்தி செய்யக்கூடாது.

# அநுபவ முறைகள்

க. நாகையா.

—:0:—

| | | |
|---|---|---|
| தண்ணீர்விட்டான் கிழங்கு | பலம் | ... 45 |
| அமுக்கராங் கிழங்கு | ,, | ... 15 |
| வல்லாரை (நிழலிலுலர்த்தியது) | ,, | ... 15 |
| அதிமதுரம் | ,, | ... 15 |

இவைகளை ஒன்றிரண்டாக இடித்து எட்டுப்படி சுத்தநீர்விட்டு நான்கில் ஒன்றாகச் சுண்டவைத்து எடுத்த குடிநீரில் கற்கண்டு வீசை ஒன்று பொடித்துக் கரைத்து அடுப்பேற்றி மணப்பாகாகச் செய்து கொள்ளவும்.

உபயோக அளவு ;— அவுன்ஸ் அரை முதல் ஒன்று; இருவேளை உட்கொள்ள கணச்சூடு நீங்கும். தாதுபுஷ்டியும் பலமும் உண்டாம்.

சுகபேதி

| | |
|---|---|
| நிழலிலுலர்த்திய ரோஜாப்பூ இதழ்கள் | பலம் 12 |
| சுத்த நீர் | ஆழாக்கு 10 |

விட்டு அடுப்பேற்றி ஒருபடி குடிநீராகக் காய்ச்சி வடித்து, மேற்படி ரோஜாப்பூ இதழ்கள் பலம் 12 சேர்த்து அரைப்படி குடிநீராகச் செய்து அதில் மறுபடியும் ரோஜா இதழ்கள் பலம் 12 சேர்த்து காய்ச்சிக் கால்படியாகச் சுருக்கி வடிகட்டி கற்கண்டு பலம் 10 சேர்த்து மணப்பாகாகச் செய்து கொள்ளவும்.

அளவு :— பலம் ஒன்று; காலையில்மாத்திரம். இதனால் மலபந்தம், பித்தம், மூலச்சூடு இவை நீங்கும்.

### குன்ம நிவாரணி

பூரம் தோலா 2, இரசம் தோலா 2 இவை இரண்டையும் முறையே சுத்திசெய்து கல்வத்திலிட்டு மஞ்சட்கிழங்குச் சாற்றால் இரு சாமமும், துளசி (பிட்டவித்துப் பிழிந்த சாற்றால்) சுரசத்தால் இரு சாமமும், அழிஞ்சில் வேர்க் குடிநீரால் இரு சாமமும், எலுமிச் சம்பழச்சாற்றால் நான்கு சாமமும் அரைத்து, படிகாரம் தோலா அரை கூட்டி மேலும் மூன்று சாமம் அரைத்து வில்லைதட்டி ரவியில் உலர்த்தி, பிறகு அகலில் வைத்து, மேலும் ஒரு அகலைப் பொருந்த வைத்து எழு சீலைமண் வலுக்க செய்து உலர்த்தவேண்டும்.

எரிப்புச்சட்டியில் பாதி மணல்கொட்டி, சீலைசெய்த வில்லையை வைத்து மேலும் நிறைய மணலைக்கொட்டி பன்னிரண்டு சாமம் காடாக் னியாக விடாமல் எரித்து, ஆறவிட்டு முருகக்கடவுளைத் தொழுது கர்ப்பூர ஆராதனை செய்து பிரித்துப்பார்க்க பற்பமாக விருக்கும்.

அளவும் அனுபானமும் :— குன்றி முதல் இருகுன்றி வீதம் முக்கடுகு சூரணம் இருகுன்றி சேர்த்து தேனிட்டு குழைத்து தினம் இருவேளையாம். பத்து நாள் கொடுப்பது ஒரு முறையாம்.

தீரும் வியாதிகள் :— சத்திகுன்மம், எரிகுன்மம், வலிகுன்மம், வாதசூலை, சந்நிவாதம், கபவாதம், மண்டைசூலை, மண்டைவாதம், பீநசம், தொண்டைபுற்று, செவிப்புற்று, யோனிப்புற்று, அரையாப்பு, பவுத்திரம், முழங்கால் வாதம், கண்டமாலை, காசம்: க்ஷயம், விப்புருதி முதலிய சகல வியாதிகளுமாம்.

பத்தியம் :– இச்சா பத்தியம்.

### கைகால் எரிவுக்கு

இலந்தை இலை, சீக்காயிலை, நெல்லியிலை, முசுமுசுக்கையிலை, கருவேப்பிலை இவைகளின் சாற்றைச் சமனாகக் கூட்டி, பசுப்பாலில் சேர்த்துக் காய்ச்சிப் புரைகுத்தி தயிராக்கிக் கடைந்து வெண்ணெய் எடுத்து உள்ளங் கை கால்களில் பூசினால் பித்தத்தாலும், மேகத்தாலும் உண்டாம் கைகால் எரிவு நீங்கும். பிரசவித்த பெண்களுக் குக்காணும் கரபாத சந்தியும் நீங்கும்.

---

## தமிழ் மருத்துவப்பொழிலின் வளர்ச்சிக்காக நன்கொடையளித்த பெரியார்களின் பெயர்கள்

–:0:–

உ. சிங்காரவேலு – மாணவர், சித்த வகுப்பு ... ரூ. 10.
B. M. தங்கராஜ், L. I. M., (L. C. P. & S. cal) ரூ 5

# நோய்ப் பெயர் வரலாறு

Dr. N. சுப்பிரமணியம், L.I.M.

(116-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பாட்டின் கடை இரண்டடிகளாலும், மற்ற மூன்றை வரும்பாட்டாலும் உணருக.

ஆருமறி யாரளக் கின்ற வாயுவை
யாருமறி யாரளிக் கின்ற வன்னியை
யாருமறி யாரழிக் கின்ற வப்புவை
யாருமறி யாவறி வறிந் தேனே.

(திருமூலர்).

## ஐந்து தொழில்களுக்கும் இரண்டு தலைவர்கள் எனல்

ஆக்கல், காத்தல்; அழித்தல் ஆன மூன்று சக்திகளுக்கும் உடல் அதிகாரியாகும். மறைத்தல் அருளல் என்ற இரண்டு சக்திகளுக்கும் உயிர் அதிகாரியாகும். இதை

சிருட்டிதிதி சங்காரந் திரோபவ ஞான
வருட்டிறத் தோடைந் தொழில் களாம்
தேகத்தின் முன்மூன்றுஞ் சிவன்பான் மற்றிரண்டு
மாகத்தான் செய்வா னரன்

(சிவஞான வள்ளலார்)

என்ற பாடல்களிலிருந்து அறியலாம். அதனுற்றுன் நோய் கணிக்க உடலாட்சிக்குட்பட்ட மூன்றை மாத்திரம் எடுத்து கொள்கிறோம்.

## ஆக்கல், காத்தல், அழித்தல் உடலில் வாத, பித்த, சேட்பமேனல்

வீசுதல் தன்மையுள்ள வாயு வாதமெனப் பேர் பெற்று ஆக்கலையும், எரிதல் தன்மையுள்ள வன்னி பித்தமெனப் பேர் பெற்றுக் காத்தலையும், பெய்தல் தன்மையுள்ள அப்பு சேட்பமெனப் பேர் பெற்று அழித்தலையும் உடலில் செய்யாநிற்கும்.

"வாதமாய்ப் படைத்துப் பித்த
வன்னியாய்க் காத்துச் சேட்பச்
சீதமாய்த் துடைத்து"

என்றூர் தருமசவுமியர் மாணுக்கராகிய தேரையர்.

அழித்தலில் அகற்றுதல், ஒன்றை ஒன்ருய் மாற்றுதல் முதலியன அடங்கும்.

## வாத பித்த சேட்பப் பெயர்க் காரணம்

'வதவத' என்ற இரட்டைக் கிளவி மிகுதியாக உண்டாவதைக் குறிக்கும். அதனின்றும் வாதம் என்ற சொல் படைத்தலைக் குறிக்க எழுந்தது.

பித்தம் என்ற சொல் பித்தல் என்பதிலிருந்து பிறந்தது. பித்தல் என்பது கரை. கரை என்ற பொருளில் ஆற்றுப் பித்தல், குளப்பித்தல் எனத் தஞ்சை ஜில்லாவில் பித்தல் என்ற சொல் வழங்குகிறது. கரை நீரைக்காக்க அமைந்தது. உடலில் காக்க அமைந்த சக்திக்குப் பித்தம் எனப் பெயரிட்டது சரியானதே.

சேட்பம் என்ற சொல் சேண் என்ற பகுதியடியாகப் பிறந்தது. அகப்பொருளில் சேட்படுத்துதல் என்ற ஒரு துறையுண்டு. அது விரைய வரைந்து கோடல் கருதிக் களவுக் கூட்டத்திற்கியையாது தோழி மறுத்துக்கூறித் தலைவனை அகற்றுதல். அகற்றுதல் என்ற பொருளதாகிய சேட்பம் உடலில் அகற்றுதல் சக்தியை இனிது விளக்குகின்றது.

வாதம் முதலியவற்றின் இயல்பாகிய உடம்பில், உயிர் ஒட்டுக் குடியிருக்கின்றது. அவை வெகுண்டஞான்று உயிர்போகின்றது. அதனால் எஞ்ஞான்றும் உயிர் இருப்பதற்கான ஒரு தனிக்கூடு இதுகாறும் அமைந்ததில்லை போலும்!

### வாதம் முதலியன வெகுளல்

நீர் மிகிற் சிறையுமில்லை தீமிகின்
மன்னுயிர் நிழற்று நிழலுமில்லை
வளிமிகின் வலியுமில்லை

—புறம் 51.

நீர்மிகுமாயின் அதனைத் தாங்கும் அரணுமில்லை; நெருப்புமிகுமாயின் உலகத்து நிலைபெற்ற உயிர்களை நிழல்செய்யும் நிழலுமில்லை. காற்றுமிகுமாயின் அதனைப் பொறுக்கும் வலியுமில்லை.

'நீர் மிகினில்லை சிறை' என்பது பழமொழி (190) 'செழும் புனல் மிக்குழிச் சிறையு முண்டோ?' என்றார் மணிமேகலையார் (5: 19).

(தொடரும்)